بســـــم الله الرحمن الرحيـــــم

# FRIDAY SERMON

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 14-02-2014

# ISLAM OFFERS RELIGIOUS FREEDOM

# இஸ்லாம் மதசுதந்திரம் வழங்குகின்றது

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

அனைத்து மக்களுக்கும் சமாதான வாழ்த்துக்கள் தெரிவித்தபிறகு தஷஹ்ஹுத்தும் தஅவ்வுசும் அல்பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

**"அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் திட்டாதீர்கள். (அப்படித் திட்டினால்) அவர்கள் அறிவில்லாமல் வரம்பை மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள். அவ்வாறே ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களுடைய செயல் நாம் அழகாக ஆக்கியுள்ளோம். பின்பு அவர்களுடைய மீட்சி அவர்களின் இறைவனிடமே இருக்கிறது. அப்போது அவர்கள் செய்ததை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்."** (6-109)

எல்லா மத நம்பிக்கைகளையும் நம்பிக்கையாளர்களையும் ஆதரித்திட வேண்டும் என்பது இஸ்லாமின் அடிப்படை நம்பிக்கையில் உட்படுகின்ற விஷயமாகும். மற்று மதங்களை சார்ந்தவர்களும் மத நம்பிக்கையாளர்களும் அவ்வாறே செயல்படவேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் தேசிய அளவிலும் உலக அளவிலும் சமாதானத்தை நிலைநாட்டிக்கொள்ள ஒவ்வொருவருவரும் அவர்களின் மதத்தையும் மதநம்பிக்கையையும் ஒன்றுக்கொன்று ஆதரிக்க வேண்டியது தவிர்க்க முடியாத விஷயமாகும். ஒவ்வொரு முஸ்லீமும் தனது மதநம்பிக்கையை கட்டி காப்பதும் அதை செயல்முறையில் வரவழைப்பதும் தங்களுக்கு மிக விருப்பமான விஷயமாக எண்ணுகின்றன. ஆனால் மதசுதந்திரமென்பது இஸ்லாமின் அடிப்படையான வகுப்பில்பட்டதேயாகும். மதசுதந்திரம் தந்திருக்கின்ற ஏதொரு சமூகத்திலும் ஆராட்சிமுறைகளிலான சர்ச்சைகள் நடத்திக் கொள்ளவும் ஏனையவர்களின் ஆலோசனைகளையும் நம்பிக்கைகளையும் சகிப்புத் தன்மையுடன் கண்டுக்கொள்ளவும் செய்வது நமது வளர்ச்சிக்கு அவசியமாகும்.

எந்த நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஒரு மனிதனுடைய மட்டும் தீர்மானமாகயிருக்க வேண்டும் என்று திருகுர்ஆன் எவ்வித சந்தேகமின்றி கூறுகின்றது.

**"நீர் கூறுவீராக: இந்தச் சத்தியம் உங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ளது. ஆகவே, விரும்புபவர் அதனை நம்பிக்கைகொள்ளட்டும் விரும்புபவர் அதனை நிராகரிக்கட்டும்"** (18:30).

நம்பிக்கை கொள்வதற்கும் அவநம்பிக்கை கொள்வதற்குமான ஒவ்வொரு மனிதனுடைய உரிமையையும் சுதந்திரத்தையும் மிக தெளிவாக திருகுர்ஆன் கூறுகின்றது.

**“அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருபெயரால்**

**நீர் கூறுவீராக, அவநம்பிக்கையாளர்களே நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன். இன்னும் நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குகிறவர்களல்லர். அன்றியும், நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்குபவனல்லன். மேலும் நான் வணங்குபவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர். உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம்”** (109:1,7).

**ஆகவே நீர் நல்லுபதேசம் செய்வீராக. நிச்சயமாக நீர் நல்லுபதேசம் செய்பவர் மட்டும் தான். நீர் அவர்கள் மீது பொறுப்பும் சாட்டப்பட்டவர் அல்லர்”.**

மேலும், அல்லாஹ் கூறுகின்றான்.

**நீர் கூறுவீராக மனிதர்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு சத்தியம் வந்துவிட்டது. எனவே யார் நேரான வழியில் செல்கின்றாரோ அவர் தம் நம்பிக்கைக்காகவே அந்நேர்வழியில் செல்கின்றார். எவர் வழி தவறினாரோ, நிச்சயமாக அவர் தமக்கு கேடான வழியிலே செல்கின்றார். நான் உங்கள் காரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவனல்லன்** (10:109).

மேலும் அல்லாஹ் தெரிவிக்கின்றான்

**நாம் உம்மை அவர்கள் மீது காப்பாளராக ஏற்படுத்தவில்லை. இன்னும் நீர் அவர்கள் பொறுப்பாளரும் அல்லர்.** (6:108).

எனது இந்த உரையின் ஆரம்பத்தில் ஓதியதும் மேல்கூறிய வசனத்தைத் தொடர்ந்து வருகின்றதுமான வசனம் இஸ்லாமின் அடிப்படை தத்துவங்களில் உட்பட்டதாகும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமின் போதனைகளையும் தத்துவங்களையும் கடன் எடுத்துக் கொள்ள உலகம் நீண்டகாலமாக முயற்சிக்கிறது. அவர்களின் தினவாழ்க்கையில் திருகுர்ஆனின் சில கட்டளைகளை அமல்படுத முயற்சிக்கின்றார்கள். காரணம் **ஷரிஅத்தின்** கடைசி வேதாகம நூலான திருகுர்ஆனில் இருந்து அவர்களுக்கு சில பலன் கிடைக்கின்று என்பதேயாகும்.

உலகின் வளர்ச்சிக்கு இந்த கட்டளைகளும் அறிவுரைகளும் அவசியமானதாகும் என்று வெளிப்படையாக கூற அவர்கள் தயாரல்ல. இஸ்லாம் என்ற மதம் உண்மையானதும், நேரானதுமான மதம் என்று அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்றாலும், மனித சமூகத்தின் சிந்தனைகளிலும் செயல்களிலும் அது மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய மதம் என ஏனைய மத நம்பிக்கையாளர்கள் கூட ஒத்துக்கொள்வதுண்டு. உள்படையாக இஸ்லாமின் போதனைகளை அவர்கள் ஒத்துக்கொள்கின்றார்கள்.

மனிதனில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்த உதவிபுரிந்த மதமேயாகும் இஸ்லாம். இப்போதும் அந்த புரட்சியை இஸ்லாம் ஏற்படுத்தி வருகின்றது. எதிர்கால மனிதர்களிலும் அது மாபெரும் புரட்சியை ஏற்படுத்துகின்ற மதமாக இஸ்லாம் திகழும். காரணம் திருகுர்ஆன் அவ்வகையான மகத்தான தத்துவங்களை வாரி வழங்கும் உன்னதமான வாழ்க்கை வழிகாட்டியேயாகும். சுருக்கமாக கூறினால் மனித உள்ளங்களில் உன்னதமான மாற்றங்கள் வழங்கிக்கொள்ளும் அளவிற்கு சக்திவாய்ந்த மதமாகும் இஸ்லாம். இஸ்லாமின் ஈர்ப்புத்தன்மையால் அதிகாரத்தை நேசிக்கின்றவர்களின் அதிகாரத்தை அது இழக்க செய்யும். நான் என்ற எண்ணதில் வாழுகின்றவர்களின் தவறான சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் அது தவிர்த்துக்கொள்ளும். இறைவனுடையவும் அவனுடைய தூதர்களுடையவும் உண்மையான பாடங்களுக்கு பதிலாக, பொய் கதைகளை கூட்டிகலந்து மதத்தை சீரழித்துக்கொண்டவர்களின் பதவி இழந்துவிடும்.

ஒரு விஷயம் நினைவுக்கு வருகின்றது. பைபிள் ஆராட்சியாளர்களும் பைபிள் மாணவர்களும் மேற்கொண்ட ஆராட்சியில் தெளிவான ஒரு விஷயம். பைபிளில் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு பிறகு எழுதப்பட்டது என்பது. இது பைபிளில் இருந்து தெளிவாக உணர்ந்துக்கொள்ளலாம். ‘ஆபிரகாமின்’ காலகட்டவுமாக எவ்வகையிலான தொடர்புமில்லாத சில கதைகள் அதில் இடம்பிடித்துள்ளது. பைபிள் எழுதியவர்கள் பெரிய தவறுகள் செய்திருக்கின்றார்கள். மதங்களோடும் மத நூல்களோடும் தங்களின் முன்னோர்கள் செய்த தவறுகள் மிக கௌரவம் வாய்ந்ததாக இருந்தாலும், அதற்கு பிற்கால மக்கள் உத்தரவாதிகளால்ல.

எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லீம்களை கற்பித்திருப்பது எல்லா மத நம்பிக்கைகளையும் ஆதரித்துக் கொள்ள வேண்டும்மென. மட்டுமின்றி மதத்தில் எவ்வகையிலான வறுப்புறுத்துதலும் இல்லை (2:257). ஆகவே சாந்தியுடனும் அமைதியுடனும் பிரார்த்தனைகள் வழியாகவும் முயற்சிகள் மூலமாகவும், எல்லா வல்ல இறைவனிடம் வேண்டிக்கொள்ளவேண்டும். அல்லாஹ் நாடினால் அவன் மக்களின் உள்ளங்களுக்கு திருப்பத்தை ஏற்படுத்திக் கொள்வான்.

அல்லாஹ் அறிவுரை வழங்குகின்றான். அவர்களின் பொய் தெய்வத்தை கூட நீங்கள் அவமானிக்க கூடாது என்று. அவர்கள் செய்வது மிக தவறான வணக்கம் என்ற உண்மையை நீங்கள் புரிந்துக் கொண்டாலும் அதை ஏளனம் செய்யவோ அவமானிக்கவோ கூடாது. ஏனெனில் அவர்களின் அறியாமைக்காரணமாக உண்மையான இறைவனை அவர்கள் குற்றப்படுத்தவும் ஏளனம் செய்யவும் செய்வார்கள். அவர்களின் அந்த தவறுக்கு முஸ்லீம்களான நீங்கள் பதில் கூறவேண்டியதாக வரும். பொது நம்பிக்கையாளர்களோடு நீங்கள் ஒரு வரம்புவரை சாந்தமாகயிருங்கள் என்று கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அல்லாஹ்வின் தூதன் இந்த மனிதர்களுக்கும் அவர்களின் பொய் தெய்வத்திற்கும் எதிராக செயல்பட அல்லாஹ்விடமிருந்து வேண்டுகோள் கிடைத்ததாக தெரிவித்தால் அல்லாஹ்வின் அந்த கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்படிந்துக் கொள்ள வேண்டும். அதனால் முஸ்லீம்களில்

ஒரு சாதாரண மனிதனுக்கும் அல்லாஹ்வின் தூதனுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உண்டு. நம்பிக்கையாளர்களில் முதடம் நபியே ஆவார். காரணம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் வெளிப்பாடுகளில் அவர் முதலாக நம்பிக்கை கொள்கின்றார். அப்படி அவர் நம்பிக்கையாளரில் முதடம் பெற்று விடுகின்றார்.

நம்பிக்கை சுதந்திரம் என்பது முஸ்லீம்களின் அடிப்படை நம்பிக்கையின் தூண்களில் உட்படுகின்ற விஷயமாகும். காரணம் மிக தெளிவான முறையில் திருகுர்ஆன் சந்தேகமின்றி அதை தெரிவிக்கின்றது. நபியின் நோக்கம் அல்லாஹ்வின் தூது செய்தியை எட்டவைக்க வேண்டும் என்பது மட்டுமின்றி எவரையும் வயுறுத்த அவருக்கு அனுமதியில்லை. தான் போதனம் செய்கின்ற செய்தியினை மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை குறித்து அவருக்கு ஒரு கடமையும் அதிகாரவும் இல்லை. எல்லா மதத் தலைவர்களிடவும் மிக கண்ணியமாக அவர் நடந்துக் கொள்ள வேண்டும். ஆனால் இறை வேண்டுகோளுக்கு ஏற்றவார் இறைசெய்தியினை எட்டவைப்பது அவரின் கடமையே ஆகும்.

சிலவேளை அன்னார் கோபத்துடனும் சிலவேளைகளில் அன்னார் பாசத்துடனும் பருமாறிக்கொள்கின்றார். அவருக்கு எதிர்கொள்ள வேண்டி வருகின்ற சூழ்நிலைக்கு அது உட்பட்டிருக்கும். இறை கட்டளைகளுக்கும் விருப்பத்திற்கும் ஏற்பசெயல்பட வேண்டும் என்பதே முக்கியத்துவமானது. தூயதூதர் முஹமது (ஸ)வின் காலத்திலும் சிலவேளைகளில் அன்னார் சிலரிடம் கோபத்துடன் பரிமாறியிருந்தார். சிலவேளை அவர்கள் நண்பராக இருப்பார்கள். அல்லது தோழர்களாயிருப்பார்கள். அல்லது பகைவர்களாக இருப்பார். அதே மக்களிடம் சில கட்டங்களில் அன்புடன் பரிமாறி இருக்கின்றார். அது சூழ்நிலைக்கு ஏற்ற விஷயமாகவும், இறைவேண்டுகோளுக்கு ஏற்ற செயலாக மட்டுமே இத்தகை விஷயங்கள் நிகழுவது. மனிதர்களின் உள்ளங்களை குறித்து மிக நன்றாக அறிந்தவன் அல்லாஹ்வை தவிர்த்து மற்று எவர்? மனிதர்களை குறித்த விவரங்கள் வெளிப்பாடுகள் வழி கிடைக்காமல் இருக்கும் காலம் வரையில் அல்லாஹ்வின் தூதர் ஒரு சாதாரண மனிதனை போன்ற இருப்பார். அன்னாரை போன்று மற்றுள்ளவர்களின் உண்மை நிலை என்னவென்று தூதருக்கு தெரியாது. ஆனால் சில மனிதர்களின் உண்மையான நிலை என்னவென்று வெளிப்பாடுகள் மூலமாக கிடைத்துக் கொள்ளும் போது, தூதருக்கு அதை குறித்த விவரங்களை உணரமுடியும். அத்தகை சூழ்நிலைகளில் சாதாரண மக்களுக்கு புரிந்துக் கொள்ள முடியாத ஒரு நிலைப்பாடு இறைதூதர் எடுப்பார். அதனால் நபிமார்களை பலவேளைகளிலும் மக்கள் பைத்தியக்காரன் என்றும் மந்திரவாதி என்றும் கூறி ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். இறை ஒளியில் இருந்தேயாகும் நபி கற்பிப்பதென்றும் உண்மையான இடம் அதுவேயன்றும் அவர்களுக்கு உணரமுடிவதில்லை.

அதனால் நம்பிக்கையாளர்களை நமக்கு மூன்றுவிதமாக வேறுபடுத்தலாம்.

1. ஆரம்பகட்டத்தில் அவர்கள் அவநம்பிக்கையாளராக இருப்பார்கள். ஆனால் சிறிது காலத்திற்கு பிறகு அவர்கள் அல்லாஹ்வுடையவும் அவனு தூதனுடையவும் நம்பிக்கைக்கொண்டு களங்கமற்ற தோழர்களாக மாறிவிடுவார்கள்.

2. அவர்கள் நம்பிக்கையாளராக இருப்பார்கள். நம்பிக்கையாளராக நடிப்பார்கள். நம்பிக்கையாளர்களின் மத்தியில் இருந்து நபியுடையவும் நம்பிக்கையாளர்களுடையவும் செயல்களைப் பற்றி பகைவர்களுக்கு தெரியப்படுத்துகின்ற தீய செயல்கள் புரிந்து வருவார்கள்.

3. கடினமான உள்ளம் கொண்ட அவநம்பிக்கையாளர்கள் அவர்களின் உள்ளவும் ஆன்மாவும் இறை ஒளியினை ஏற்றுக்கொள்ள மறுத்துக்கொண்டிருக்கும்.

நயவஞ்சகர்களை பொறுத்தவரையில், அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் நிரந்தரமான தொடர்பிருந்தால் அவர்களுக்கு உண்மையான நம்பிக்கையை எட்டிவிட முடியும்.

மூன்றாம் வகையில்படுகின்ற அவநம்பிக்கையாளர்கள் அதிகாரம் 109-ல் கூறப்பட்டிருப்பதை போன்றாகும். உண்மை நம்பிக்கை அவர்களுக்கு சற்றும் விருப்பமில்லாத விஷயமாகும். அவர்கள் பழமையான நம்பிக்கையின் பால் உறுதியாக நிலைகொள்ள விரும்புகின்றவர்கள் ஆவார்கள். அவர்களிடம் சமாதானமான ஒரு பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவதேயாகும் இஸ்லாமின் நோக்கம். அவ்வாறேயானால் எல்லா மக்களுக்கும் முஸ்லீம்களோ மற்றவர்களோ ஆகட்டும் அவர்களுக்கு சமாதானமான முறையில் வாழ்ந்திட முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ்வே ஆவான் எல்லாவர்களையும் விதிப்பது. அந்த விதி அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்றவாறு இருக்கும். அவர்களின் செயலுக்கு ஏற்றவாறு இருக்கும். அவர்களின் நோக்கத்திற்கு ஏற்றவாறு இருக்கும். இறைதூதர்களின் கடமை அலலாஹ்வின் தூது செய்தியை அவர்களுக்கு தெளிவாக எட்டவைப்பதேயாகும். நாங்கள் உண்மையை குறித்து அறிந்து கொள்ளவில்லை என்று மறுமையில் அவர்கள் கூறாமல் இருப்பதற்காக.

நேர்மார்க்கத்தை பின்பற்றுகின்ற அனைவருக்கும் சமாதானம் உண்டாகட்டும். ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமில் சார்ந்த அனைவரும் அதை போன்றே உலகனைத்துமுள்ள முஸ்லீம் சகோதரர்களுக்கும் இஸ்லாமின் உண்மையான மகத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிந்துவிடட்டும். இஸ்லாம் போதிக்கின்ற சமாதானம் உலகிலுள்ள அனைத்து மக்களின் நலனுக்கு வேண்டியாகும். அதை நமது செயல்கள் மூலமாக உலக மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் போதனைகளை நாங்கள் இழக்கவில்லை என்று ஒரு தடவ கூட நிரூபித்துவிட வேண்டும். இஸ்லாமின் ஒளியை, வெற்றிகரமான நிலையில் இறுகப்பிடிக்க நாம் ஆற்றல் வாய்ந்தவர்களாவோம் என்று உலகம் ஒரு தடவை கூட உணர்ந்து கொள்ளட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

Translated by
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817

**Issued by**
**Jamaat Ul-Sahih Al Islam,**
**Dawa Department,**
**Tamil Nadu, India. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**